நல்லவை, தீயவை உலகைப் பிளப்பவை

சத்குரு சொல்கிறார் -

ஒன்று தீயது என்று சொன்ன வினாடியிலிருந்து அதை வெறுப்பதை உங்களால் தவிர்க்க முடியாது.

மனிதர்கள் எப்போதும் தாங்கள் நல்லவர்கள் என்றும், மற்றவர்களெல்லாம் தீயவர்கள் என்றும் நம்புகிறார்கள். அப்படித்தான் இந்த உலகில் அவர்களால் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிகிறது. இமயமலையின் பாதையில் நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். அதை இப்போது இருவழிச் சாலையாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் நிலச்சரிவின் காரணமாகவும், சாலைகளைத் தாண்டி வாகனங்கள் விழுவதாலும் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வளைவுகளில் பயணம் செய்வது ஆபத்தானது. ஒரு சிறு தவறு நேர்ந்தாலும் அதோகதி தான். இங்கே நீங்கள் பயணம் செய்கிற போது ஓட்டுநருக்கு மிகப் பெரிய பொறுப்பைத் தருகிறீர்கள். அவர் ஒரு சிறு தவறு செய்தாலும் உங்கள் வாழ்க்கை முடிந்துவிடும். ஒவ்வோர் அண்டும் பலரும் அத்தகைய தவறுகளைச் செய்கிறார்கள். சாலையோரங்களில் உலோகக் குவியல் ஏதாவது உங்கள் கண்ணில்பட்டால் அது நொறுங்கிப் போன வாகனமாகத்தான் இருக்கும்.

எனவே, அதனை இப்போது இருவழிச்சாலை ஆக்குகிறார்கள். இது நல்லதா? தீயதா? உங்களைப் போன்றவர்கள் இன்னும் வசதியாகப் பயணம் செய்யலாம். ஆபத்து குறைவு. எனவே, இது நல்லது என்று நினைப்பீர்கள். இன்று பலரும் சாலைகள் அமைப்பதையும், மலைகளின் வடிவத்தைக் கெடுப்பதையும், இந்துப் பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகளுக்கு இடையூறு தருவதையும் எதிர்க்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை இது தீமையான செயல். அதிகாரத்தில் இருப்பவர்களோ, பெரும்பான்மையானவர்களோ, ஏதோவொன்றை நல்லது என்று நினைப்பதாலேயே அது நல்லதாகி விடாது. வேண்டுமானால் ஒரு மனிதனை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். ஒரு பயங்கரவாதி செய்பவை நன்மையானவையா? தீமையானவையா? அது தீமையானது என்று நீங்கள் சொல்லலாம். அதே நேரம் எது நல்லது, எது தீயது என்பதெல்லாம் நீங்கள் எந்த அணியில் இருக்கிறீர்கள் என்பதைச் சார்ந்தது. இந்தியா நல்லதா? பாகிஸ்தான் நல்லதா? என்று கேட்டால் நீங்கள் எல்லைக் கோட்டின் எந்தப் பகுதியில் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே பதில் அமையும். இந்தப் பகுதியில் இருக்கிறீர்கள், எனவே, இந்தியா நல்லது என்று கருதுகிறீர்கள். பாகிஸ்தானியர்கள் தீயவர்கள் என்று கருதுகிறீர்கள். அடுத்த பகுதியில் இருந்தால், அந்தப் பக்கத்திற்கு ஆதரவாக வாதிடுங் கொண்டிருப்பீர்கள். நல்லது, தீயது என்பதெல்லாம் உங்கள் அடையாளங்களைப் பொறுத்தவை. அவற்றைக் கடந்து உங்களால் சிந்திக்க முடியவில்லை.

எண்ணங்கள், அடையாளங்களின் எல்லைகுக் உட்பட்டவை. அடையாளங்கள் எப்போதும் குறுகியவை. எனவே உங்கள் எண்ணங்களும் குறுகியவை. இந்தக் குறுகிய நிலையில் இருந்து கொண்டு எது நல்லது, எது தீயது என்று முடிவு செய்ற அபத்தத்தில் ஏன் இறங்குகிறீர்கள். ஒன்றைத் தீயது என்று சொன்ன மாத்திரத்தில் அது உங்களுக்கு பிடிக்காமல் போகும். இவர் ஒரு தீய மனிதர், ஆனாலும் பரவாயில்லை என்று உங்களால் சொல்ல முடியுமா என்ன? மேலோட்டமாகச் சொல்லலாம். ஆனால் அவர் உங்களை நெருங்க, நெருங்க அது வெறுப்பாக வளர்ந்துவிடும். எனவே, ஒன்று நல்லது, தீயது என்கிற அடையாளத்திற்குள் நீங்கள் சிக்கிக் கொள்கிற போது உலகத்தைப் பிளவுபடுத்துகிறீர்கள். என்னிடம் யாராவது வந்து நான் ஆன்மீகப் பாதையில் நடையிட வேண்டுமென்று கேட்கிறார்கள். சரி, ஏற வாரும் இங்கே இருங்கள். என்ன செய்யலாமென்று பார்க்கிறேன் என்கிறேன். இல்லை வருகிற சனிக்கிழமை என் உறவினரின் பிறந்தநாள். நான் போக வேண்டும். மூன்று நாட்களுக்குத்தான் இங்கு இருக்க முடியும் என்று சொல்கிறார். நான் சரி என்று சொல்லிவிட்டே. அப்படியானால், இந்த ஆன்மீகப் பாதையில் எவ்வளவுவரைதான் நடையிட விரும்புகிறீர்கள்? என்று கேட்டால் கடைசிவரை என்கிறார்கள். மூன்று நாட்களிலேயே கடைசி வரை நடையிடப் போகிறீர்களா? என்று கேட்டுவிட்டு சில விஷயங்களைச் செய்யுங்கள், பிறகு பார்க்கலாம் என்று சொன்னால், இல்லை, இவையெல்லாம் எனக்குப் பிடிப்பதில்லை என்று சொல்கிறார். உடனே நான் அவரிடம், உங்களுக்கு என்னவெல்லாம் பிடிக்குமென்று ஒரு பட்டியல் கொடுங்கள். அவற்றை மட்டுமே செய்யலாம் என்றால், அவர் உடுக்காற்று போசித்து, போசித்து ஒரு நந்தாறு விஷயங்களை உங்களுக்குப் பிடித்துக்கிண்றன. இவற்றை லிஸ்ட்டுக் கொண்டு நீங்கள் ஆன்மீகப் பாதையில் எப்படி நடையிட முடியும்? இதற்கு எங்கே வாய்ப்பு? நீங்கள் உங்களுக்குள் நல்லது, தீயது என்று பகுக்கத் துவங்கிய போது, உலகத்தைப் பிளவு படுத்தத் துவங்கிறீர்கள். பிளவுபடுத்த துவங்கிறபோது, உங்களுக்குள் ஏராயிரத்தாக ஏது வாய்ப்பு? யோகாவுக்கு ஏது வழி? பிரபஞ்சத்தோடு ஒன்றாவதற்கு ஏது வழி? உண்மையைக் கண்டுபிடிக்க ஏது காத்திக்கபடுறு? உங்களுடைய பிரச்னைகள் எல்லாம். உங்கள் முயாமாதனத்தால் வருபவை. அவற்றுக்கும், நிதர்சனத்துக்கும் எந்த சம்பந்தமுமில்லை. உங்கள் அகங்காரத்தின் தேவைக்கேற்ப்பத்தான் நல்லதையும், தீயதையும் நீங்கள் நிர்ணயிக்கிறீர்கள். இதன்படி போனால் வாழ்வின் இருவேறு இயல்புளுக்குள் சிக்கிப் போவீர்கள். பிரபஞ்சத்தின் இருப்பையே நீங்கள் பிளவு படுத்துகிறீர்கள். அந்த நிலையில் உங்களுக்குள் ஆன்மீகம் எழுவதற்கு வாய்ப்பில்லை. ■